சுகாதாரமும் உடற்கல்வியும்

# நிரற்போட்டி ஒழுங்கமைப்பு



121208

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர் : | ஏ. ஜீ. டிங்கிரி பண்டா |
| பாடப்பதிப்பாசிரியர்கள் : | பீ. வீ. பேமசந்திரா<br>ஸ்னேஹலதா சேனுநாயக்கா<br>எச். எம். ஜயதிலக்க<br>சுமனு அபேகோன்<br>பூர்ணு த சில்வா<br>எம். எச். எம். யாகூத் |
| சித்திரம்: | பீ. பிலபிற்றிய |
| தளக்கோலம் : | ஏ. சிவராஜா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு: | கலாநிதி. எஸ். டி. லயனல். அமரகுணசேகர |

R. Regina

# நிரற்போட்டி ஒழுங்கமைப்பு

தொலை கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 1212 |
| நிரற்போட்டி ஒழுங்கமைப்பு | 121208 |

உள்ளடக்கம் பக்கம்

0.0 அறிமுகம் ........................................ 3

1.0 குறிக்கோள்கள் ........................................ 4

2.0 முற்சோதனை ........................................ 4

பகுதி I

3.0 நிரற்போட்டிகளும் அவற்றின் முக்கியத்துவமும் ஒழுங்கமைப்பும் ... ........................................ 5

பகுதி II

4.0 விலக்கு முறை நிரற்போட்டிகளை ஒழுங்கமைப்புச் செய்தல் ........................................ 10

பகுதி III

5.0 முறையை ஒழுங்கமைப்புச் செய்தல் ........................................ 25


6.0 பொழிப்பு ........................................ 35

7.0 பிற்சோதனை ........................................ 36

8.0 ஒப்படைகள் ........................................ 38

9.0 விடைகள் ........................................ 39

1991 – தேசிய கல்வி நிறுவகம்
பதிப்பு 1 – 2



## 0.0 அறிமுகம்

உங்களது பிரதேசத்தில் நடத்தப்பட்ட நிரற்போட்டிகளை நீங்கள் கண்டுகளித்திருப்பீர்கள் அல்லது அதைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்கள் அத்தோடு நிரற் போட்டிகள் தொடர்பான தகவல்களை புதினத் தாள்கள் மூலமும் வாசித்து அறிந்திருப்பீர்கள். கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே போன்ற குழு விளையாட்டுக்களும் மல்யுத்தம், குத்துச்சண்டை, டாம் சதுரங்கம் போன்ற ஒற்றையர் விளையாட்டுக்களும் நிரற் போட்டிகட்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. ''லேற்றன்'' கிண்ணம் குத்துச் சண்டைக்காகவும் ''சரவண முத்து'' கிண்ணம் கிரிக்கெற் விளையாட்டுக்காகவும் ''கிளிபர்ட்'' கிண்ணம் ரகர் விளையாட்டுக்காகவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறான நிரற் போட்டிகள் ஒவ்வொரு நாட்டிலும் மாத்திரமின்றி சருவதேச ரீதியிலும் நடைபெறுகின்றன. உலகக் கிண்ணத்துக்காக நான்கு ஆண்டுகட்கு ஒரு தடவை இங்கிலாந்தில் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிறிக்கெட் நிரற் போட்டி சருவதேச ரீதியில் நடத்தப்படும் நிரற் போட்டிக்கான ஓர் உதாரணமாகும். பாடசாலை மாணவரின் விளையாட்டுத்திறன்களை பாடசாலையிலும், பாட பாடசாலைக்கு வெளியேயும் காட்டுவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பாக நிரற் போட்டிகள் அமைகின்றன, அத்தோடு நிரற் போட்டிகளில் பங்கு பெறும் போது உங்கள் பாடசாலை மாணவரின் திறன்களை ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவரின் திறன்களுடன் ஒப்பிடுவதற்கான வாய்ப்பும் கிடைக்கப் பெறுகின்றது. உங்கள் பாடசாலையிலும் நீங்கள் வாழும் பிரதேசத்திலும் நிரற் போட்டிகளை ஒழுங்கு செய்யும் வேளைகளில் உங்களது அறிவுறுத்தல்களையும் ஒத்துழைப்பையும் அவர்கள் வேண்டி நிற்கக்கூடும். எனவே ஆசிரியர் என்ற வகையில் நிரற் போட்டிகள் தொடர்பான போதிய விளக்கத்தை நீங்கள் பெற்றிருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

நிரற் போட்டிகளின் முக்கியத்துவம், அவற்றை ஒழுங்குபடுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், ஒழுங்குபடுத்தும் முறைகள், இம்முறைகளின் நன்மை தீமைகள் என்பன பற்றி இம்மொடியூலின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

## 1 0 குறிக்கோள்

இம்மொடியூலேக் கற்பதன் மூலம் நீங்கள் பின்வரும் குறிக்கோள்களே நிறைவு செய்து கொள்ளலாம்.

★ நிரற்போட்டிகளே ஒழுங்கமைக்கும் முறைகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.

★ அம்முறைகளின் நன்மை தீமைகளே இனங் காணல்

★ நிரற்போட்டிகளே வெற்றிகரமாக நடத்த முடியும் என்னும் தன்னம்பிக்கை ஏற்படல்.

★ நிரற்போட்டிகளே வெற்றிகரமாக ஒழுங் கமைக்கும் திறனேப் பெற்றுக்கொள்ளல்.

இம்மொடியூலேக் கற்க முன்னர் பின்வரும் வினுக் கொத்தின் மூலம் உங்கள் முன்னறிவைச் சோதித்துக் கொள்ளுங்கள்.


## 2.0 முற் சோதனே

பின்வரும் வினுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் அல்லது விடைகளின் கீழ்க் கோடிடுக.

i பின்வரும் பட்டியலில் அடங்கியுள்ள பிரதான விளேயாட்டு நான்கினேயும் குறிப்பிடுக. கரப்பந் தாட்டம்,வலேப்பந்தாட்டம், துடுப்புபந்தாட்டம், குண்டெறிதல், அஞ்சலோட்டம், உதைப்பந் தாட்டம்.

ii ''மெய்வல்லுநர் விளேயாட்டுப் போட்டி'' நிரற் போட்டி'' ஆகிய இருபெயர்களாலும் கருதப் படுவது இருவேறுபட்ட போட்டி வகைகளாகும் /ஒரே விதமான போட்டியாகும்.


iii நிரற்போட்டியொன்றில் முதலாமிடத்தைப் பெறும் குழுவுக்குக் கிடைப்பது வெற்றிக்கேடயம் /சவாற்கேடயம்/ குழுக்கேடயம் ஆகும்.




1

iv பின்வருவனவற்றுள், நிரற்போட்டிகளே ஒழுங் கமைக்க முடியாத விளேயாட்டு எது? டாம்/கரப்பந்தாட்டம்/சதுரங்கம் / தெனிசு /சட்ட வேலிப்பாய்ச்சல்/எல்லே.

v நிரற்போட்டியொன்றுக்கும் சினேகபூர்வ போட்டி யொன்றுக்கும் இடையில் வேறுபாடு உண்டு/ வேறுபாடு இல்லே.



2



3

vi நிரற்போட்டியொன்றை ஒழுங்கமைப்பதற்காக குறைந்தபட்சம் எத்தனை குழுக்கள் இருத்தல் வேண்டும்?

vii பின்வரும் ஒவ்வொரு விளையாட்டுக்கள் தொடர்பாகவும் குழுவொன்றில் அடங்கியிருக்க வேண்டிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை கோடிட்டுத் தொடர்புபடுத்திக்காட்டுக.

| | | |
|---|---|---|
| கரப்பந்தாட்டம் | : | 07 |
| எல்லே | : | 12 |
| துடுப்பாட்டம் (கிரிக்கெற்) | : | 06 |
| வலைப்பந்தாட்டம் | : | 11 |
| உதைப்பந்தாட்டம் | : | 16 |

படத்தில் காட்டப்பட்டுள்ள விளையாட்டுத்திடல்கள் எவ்வெவ் விளையாட்டுக்களுக்குரியவை எனக்குறிப்பிடுக.

போட்டியொன்று நடத்தப்படும்போது குறிப்பிட்ட மூன்று பிரிவினர் காணப்பட வேண்டியது அவசியமாகும். அக்கூட்டத்தினர் யாவர்?

i பார்வையாளர்கள் விளையாட்டு வீரர்கள், உபசரணையாளர்கள்.

ii விளையாட்டு வீரர்கள், ஒழுங்மைப்பாளர், அதிகாரிகள்.


iii விளையாட்டு வீரர்கள், பார்வையாளர், அதிகாரிகள்.

iv விளையாட்டு வீரர்கள், முதலுதவியாளர், உபசரணையாளர்.

சரியான விடைகள் இறுதியில் உள்ளன. உங்கள் விடைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்

பகுதி I

## 3.0 நிரற்போட்டிகளும் அவற்றின் முக்கியத்துவமும் ஒழுங்கமைப்பும்



நிரற்போட்டி ஒழுங்கமைத்தல் பற்றிக் கற்றுக்கொள்ள முன்னர், நிரற்போட்டி என்பது யாது என அறிந்து கொள்ளல் அவசியமாகும். யாதேனுமொரு விளையாட்டில், வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்காக போட்டியில் கலந்து கொள்ளும் குழுக்களுக்கிடையேயோ, தனிப்போட்டியாளர்களுக்கிடையேயோ நடத்தப்படும் போட்டி தொடர்களும் அல்லது குறிப்பிட்ட போட்டி அட்டவணை போட்டி விதிகள் ஆகியவற்றிற்கு அமைவாக நடாத்தப்படும் போட்டித்தொடர்கள் ''நிரற்போட்டிகள்'' என அழைக்கப்படுகின்றன.


## நிரற்போட்டிகளின் முக்கியத்துவம்

பின்வரும் விடயங்களின் மூலம் நிரற்போட்டிகளின் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

- தனி நபர்கட்குத் தமது திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கான சவால் நிரற்போட்டிகளின் போது கிடைக்கப்பெறுகின்றது.
- நிரற்போட்டிகளின் போது, தனி விளையாட்டு வீரர்கட்கும், விளையாட்டுக் குழுக்களுக்கும் நிகராய் போட்டியிடுவதற்கான சிறந்த வாய்ப்பு கிடைக்கப்பெறுகின்றது.
- நிரற்போட்டியானது வெற்றிவாகை சூடவேண்டிய இலக்கைக் காட்டுகின்றது. வெற்றிகொள்ள வேண்டிய இலக்கு வெற்றிக்கிண்ணமாகும். எனவே அதனை வெற்றிகொள்ளும் பொருட்டு, பயிற்சிகளில் ஈடுபடுவதில் விளையாட்டு வீரர்கள் ஆர்வம் காட்ட இடமேற்படுகின்றது.
- நிரற்போட்டிகளின்போது, போட்டியில் ஈடுபடும் விளையாட்டுக்குழுக்களுக்கும் தனிப்போட்டியாளர்களுக்கும் தமது குறைபாடுகளை இனங்கணடு அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறுகின்றன.
- புதிய விளையாட்டுக் குழுக்களும் வீரர்களும் திறமை மிக்க விளையாட்டுக்குழுக்களும், திறமைமிக்க வீரர்களும் போட்டிகளில் ஈடுபடும் விதத்தை அவதானித்துத் தத்தமது திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு நிரற்போட்டிகளின் போது கிடைக்கப்பெறுகின்றன.
- விளையாட்டுக்களின் தன்மையை விருத்தி செய்து கொள்வதற்கும் நிரற்போட்டிகள் அவசியமாகின்றன.
- நிரற்போட்டிகளின்போது நிகருக்கு நிகர் நின்று விளையாட்டில் ஈடுபடுவதால் விளையாட்டு நுட்ப முறைகளையும் விளையாட்டு உத்திகளையும் விருத்தி செய்து கொள்ள வழிபிறக்கின்றன.
- பரம்பிக்காணப்படும் விளையாட்டு வீரர்களின் திறமைகளை ஒரே வேளையில் கண்டுகளிக்கக்கூடிய வாய்ப்பு நிரற்போட்டிகளின் போதே கிடைக்கப் பெறுகின்றது.
- நற்பிரஜையொருவரை உருவாக்குதல், விளையாட்டின் நோக்கங்களுள் ஒன்றாகும். அந்நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்கான செயன்முறை வாய்ப்பு நிரற்போட்டிகளின்போது கிடைக்கப் பெறுகின்றது. அது தொடர்பான திறன்களை மதிப்பீடு செய்யும் வாய்ப்பு நிரற்போட்டிகளின் போது கிடைக்கின்றது.

**ஒழுங்கமைப்பு**

நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைக்கும்போது, அறிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள் பற்றிக்கவனிப்போம். நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வதற்காகவே ஒழுங்கமைப்பு அவசியமாகின்றது. எனவே முதலில் நோக்கங்கள் பற்றிய தெளிவான விளக்கத்தை ஒழுங்கமைப்பாளர்கள் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். விளையாட்டில் ஈடுபடுவோரின் திறன்களை விருத்தி செய்வதும், பார்வையாளர்களுக்கு சிறந்த நிரற்போட்டியொன்றினைக்கண்டு களிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதுமே, நிரற்போட்டிகளின் நோக்கமாகும். அந் நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்காகவே நிரற்போட்டிகளை ஒழுங்கமைப்புச் செய்தல் வேண்டும்.




நிரற்போட்டியை நடத்துவதற்கான கால வேளைகள் பொருத்தமானதா என்பதன்பால் ஒழுங்கமைப்பாளர் கவனஞ் செலுத்த வேண்டியது முக்கியமானதாகும். நிலவும் வானிலை, காலப்பகுதி என்பன உரிய நிரற்போட்டியை நடத்துவதற்கு ஏற்றவையா என்பதன்பால் கவனஞ் செலுத்துதல் வேண்டும். உதாரணமாக, கிரிக்கெற் நிரற் போட்டியொன்றினை ஒழுங்கமைப்புச் செய்வதாக இருப்பின் அதற்கு ஏற்ற வானிலை நிலைமைகளையும் பொருத்தமான காலப் பகுதியையும் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். அத்தோடு விளையாட்டு வீரர்கட்கும் பார்வையாளர்கட்கும் ஏனைய உதவியாளர்கட்கும் பங்களிப்புச் செய்யும் ஒத்துழைப்பு வழங்கவும் ஏற்றதாக அமையக்கூடிய காலப்பகுதியொன்றினைத் தெரிவு செய்தல் அவசியமாகும்.

உத்தேச ஒழுங்கமைப்பு நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம், விரயஞ் செய்யக் கூடிய நேரம், உழைப்பு, பெற்றுக் கொள்ளக்கூடிய விளையாட்டு மைதானங்கள் ஏனைய அதிகாரிகள் ஆகியன பற்றிய சரியான விளக்கத்தையும், உத்தேச மதிப்பீட்டையும் ஒழுங்கமைப்பாளர் பெற்றிருத்தல் அவசியமாகும். மேற்படி விளக்கங்களைக் கருத்திற் கொண்டே நிரற்போட்டிகளை நீங்கள் ஒழுங்கமைப்புச் செய்தல் வேண்டும்.

கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகட்கு உதவியாக அமையும். அவர்களது விளையாட்டு நிலை, வயது, இனம், பால், மதம் தொழில், வதிவிடம், போன்ற விடயங்களை அறிந்திருப்பதன் மூலம் அவர்களுக்குப் பொருத்தமானவாறு, உரிய ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக இலகுவானதாக அமைகின்றது.

போட்டியாளர்கட்கும் பார்வையாளர்கட்கும் தேவையான இடவசதி முதலுதவி, போன்றன பற்றியும்

கவனஞ் செலுத்துதல் வேண்டும். விளையாட்டு வீரர்கள் உணவு பானதிகள், பெற்றுக் கொள்வதற்கான வசதிகள், தங்குமிடவசதிகள் போன்றவை பற்றியும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். போட்டிகளின் போது, மத்தியஸ்தம் [illegible]தான அதிகாரிகள் குழுவைத் தெரிவு செய்கையில் கூடிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். போட்டிகளின் சட்டவிதிகள் நன்கு அறிந்துவைத்துள்ள, திறமைமிக்க நபர்களைத் தெரிவு செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். போட்டி நடைபெறும் தினங்கள் நேரம், இடங்கள் போன்றவற்றை நேரகாலத்துடன் இவர்கட்கு அறிவிப்பது அவசியமாகும். அவர்களிடமிருந்து பதில்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களது வருகையை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.

விண்ணப்பங் கோருகையில் போட்டி விதிகள், நிபந்தனைகள் போன்றவற்றை விளையாட்டு வீரர்கட்கு அறிவிப்பது அவசியமாகும். நிரற்போட்டியொன்றின் போது தோன்றக் கூடிய பிரச்சினைகள் தொடர்பான சகல தீர்வுகளும் அதில் இடம்பெற்றிருத்தல் வேண்டும். போட்டிகளில் ஈடுபடுவதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்காக போதிய அவகாசம் கிடைக்கப் பெறும் வண்ணம் போட்டித் திகதிகள் தொடர்பான விபரங்களை நேரகாலத்துடன் போட்டியாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

நிரற்போட்டியை நடத்துவதற்கான விளையாட்டுத் திடல்களை நேரகாலத்துடனேயே ஒதுக்கிப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தேவையான அமைதிப்பத்திரங்களை நேரகாலத்துடன் பெற்றுக் கொள்ளல், தேவையான உபகரணங்களையும் பொருள்களையும் போட்டி நடைபெறும் தினத்துக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளல் என்பன ஒழுங்கமைப்பின் முக்கிய அம்சங்களாகும். போட்டியிடும் குழுக்கள் நல்லெண்ணத்துடன் போட்டியில் ஈடுபடக்கூடிய அளவுக்கு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் சிறப்பாக அமைதல் வேண்டும். பக்கச்சார்பற்ற, உறுதியான நியாயமான முடிவுகளை மேற்கொள்வதன மூலம், போட்டியிடும் குழுக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடிவதோடு நிரற்போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடிக்கவும் வழிபிறக்கும்.

நிரற்போட்டி முடிவடைந்த பின்னர், அதன் நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என ஆராய்வது அவசியமாகும்.

விழாக்களை ஒழுங்கமைக்கையில் இடம் பெறும் குறைபாடுகள், ஒழுங்கமைப்பின் சிறப்பம்சங்கள் என்பன பற்றிய விளக்கத்தைப் பெற்றிருத்தலானது பின்னொரு சந்தர்ப்பத்தில் நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைப்பதில் பேருதவியாக அமையும்.

## நிரற்போட்டிகளை நடத்தக்கூடிய பிரதான முறைகள்,

அடுத்ததாக, நிரற்போட்டிகளை ஒழுங்கமைக்கக் கூடிய முறைகளைக் கவனிப்போம். நிரற்போட்டிகளை ஒழுங்கமைக்கக்கூடிய இரண்டு முறைகள் உள்ளன.

- ( தோல்வியடைவோரை ) விலக்கும் முறை.
- லீக் முறை.

இம்முறை தொடர்பான மேலதிக விபரங்கள் பகுதி ii, பகுதி iii ஆகியவற்றில் விளக்கப்படும்.

நீங்கள் இதுவரையில் கற்ற விடயங்களைச் சுருக்கமாக நினைவூட்டிக் கொள்வதற்காக, பின்வரும் பொழிப்பை வாசியுங்கள்.

நிரற்போட்டி என்பது யாதேனுமொரு விளையாட்டில் வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்காக விதிக்கோவையொன்றுக்கு அமைய, குறிப்பிட்ட போட்டி அட்டவணையொன்றுக்கு அமைவாக, குழுக்களுக்கிடையேயோ தனிப் போட்டியாளருக்கிடையேயோ நடத்தப்படும் போட்டித் தொடராகும். விளையாட்டினதும், விளையாட்டு வீரர்களதும் விளையாட்டு நிலைமை விருத்தியடைவதற்கும், விளையாட்டின் பரந்த நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்கும் நிரற்போட்டி அவசியமாகின்றது.

நிரற்போட்டியொன்றினை வெற்றிகரமாக ஒழுங்கமைப்புச் செய்ய வேண்டுமெனின், அதன் நோக்கங்கள் கிடைக்கப்பெறும் வளங்களின் அளவு பங்குபற் குழுக்களின்/தனிப்போட்டியாளர்களின் எண்ணிக்கை என்பன தொடர்பான விபரங்களை பற்றிய விளக்கத்தைப் பெற்றிருந்தல் வேண்டும். குழுக்களின் நம்பிக்கையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காக, செயற்றிறனும், பக்கச்சார்பு இன்றிக் கருமமாற்றுதல்வேண்டும். இறுதியில் நிரற்போட்டியின் வெற்றிகரமான தன்மையை மதிப்பீடு செய்ய வேண்டியதும் அவசியமாகும். நிரற்போட்டிகள் பிரதானமாக இரண்டுமுறைகளில் நடத்தப்படுகின்றன.

1 விலக்கும் முறை.

2 லீக் முறை……

இதுவரை நீங்கள்பெற்ற விளக்கத்தின் துணையுடன் பின்வரும் செவ்வை பார்த்தலுக்கு விடையளிக்க.

''அ'' பகுதி உள்ள வாக்கியப் பகுதிக்குப் பொருத்தமான வாக்கியப் பகுதியை பகுதி ''ஆ'' இல் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெறுங்கூட்டினுள் எழுதுக.

| பகுதி அ | | பகுதி ஆ | |
|---|---|---|---|
| 1 | விளையாட்டு விருத்தியடைவதற்கு | 1 | வெற்றிக் கேடயமாகும் |
| 2 | நிரற்போட்டியொன்றின் போது, விளையாட்டு வீரர்களை போட்டி மனப்பான்மைக்கு தூண்டும் இலக்கு, | 2 | அதன் நோக்கங்கள் தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 3 | விளையாட்டின் மூலம் நாம் எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேறுவது தொடர்பான வெற்றிகரமான மதிப்பீட்டை | 3 | நிரற்போட்டியின் வெற்றிகரமான தன்மையாகும். |
| 4 | நிரற்போட்டியென்றினை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்த வேண்டுமெனின் | 4 | நிரற்போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்ய உதவும். |
| 5 | குழுக்களுக்கிடையே நன்நம்பிக்கை ஏற்படும் வண்ணம் கடமையாற்றலானது. | 5 | வீரர்கள் நிரற்போட்டியில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளலாம். |
| 6 | நிரற்போட்டி தொடர்பாக ஈற்றில் மேற்கொள்ளும் மதிப்பீடு | 6 | நிரற்போட்டி அத்தியாவசியமாகின்றது. |
| | | 7 | பின்னரொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொன்றினை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவும். |
| | | 8 | ஒழுங்கமைப்பாளர் விடும் தவறுகளுள் ஒன்றாகும். |

சரியான விடைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன.

## பகுதி ii

அடுத்ததாக நிரற்போட்டி ஒழுங்குபடுத்தும் முறைகளுள் ஒன்றான தோல்வியடைவோரை வெளியேற்றும் முறைபற்றிக் கவனிப்போம்.

### 4.0 தோல்வியடைவோரை விலக்கும் முறை ஒழுங்கமைப்புச் செய்தல்.

விலக்கும் முறையின்போது, தோல்விடையும் குழுக்கள் நிரற்போட்டியிலிருந்து படிப்படியாக விலக்கப்படுகின்றன. வெற்றி பெறும் குழுக்கள் மீண்டும் மீண்டும் போட்டியிட்டபடி, முன்னேறிச் செல்கின்றன. இறுதியில் வெற்றி வாகை சூடும் குழுவுக்கு வெற்றிக்கிண்ணம் அல்லது கேடயம் கிடைக்கின்றது. இறுதிப் போட்டியில் முதலிடம் பெறும் குழுவிடம் தோல்வியடைந்த குழுவுக்கு இரண்டாமிடம் கிடைக்கின்றது.


நிரற்போட்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கு மிகவும் இலகுவான முறை விலக்கும் முறையாகும்- வெற்றியாளரை மிக விரைவாகத் தெரிவு செய்யக்கூடிய வசதி இம்முறை

யில் காணப்படுகின்றது. அதிக குழுக்கள் போட்டியிடுகின்றனவெனின்; காணப்படும் வளங்கள் குறைவானதாக இருப்பின்; குறுகிய காலத்துள் நிரற்போட்டியை நடத்தி முடிக்க வேண்டுமெனின் விலக்கும் முறையே மிக ஏற்றதாகும்.

போட்டி அட்டவணையொன்றுக்கு அமையவே போட்டிகள் நடத்தப்படல் வேண்டும். போட்டி அட்டவணை என்பது, போட்டியிடும் குழுக்கள் போட்டியில் ஈடுபடும் ஒழுங்கு. போட்டி நடைபெறும் இடங்கள், நேரம் போன்றவற்றைக் காட்டும் அட்டவணையாகும்.

அடுத்ததாக நாம் போட்டி அட்டவணையொன்றைத் தயாரிக்கும் விதத்தைக் கவனிப்போம். விலக்கும் முறைக்கு அமைவாக, 8 குழுக்கள் கலந்து கொள்ளும் போட்டி அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது. இதனைக் கவனமாகக் கற்க.

**போட்டி அட்டவணை**



மேற்குறிப்பிட்ட நிரற்போட்டி அட்டவணையை விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

1, 2, 3, 4 ஆகிய போட்டிகள் முதற் பகுதியையும் 5, 6, 7, 8 ஆகிய போட்டிகள் கீழ்ப்பகுதியையும் சேர்கின்றது. இந்நிரற்போட்டி இட்டவணையில் போட்டி வட்டங்கள் மூன்று உள்ளன. முதற் சுற்றில் 4 போட்டிகள் உள்ளன. குமுதம் வி. க. அமுதா விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கிடையிலான போட்டி (போட்டி இல. 2) 1987. 08. 07 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு விளையாட்டுத் திடல் இல. 1 இலும், கமலம், சாந்தி விளையாட்டுக் கழகங்கட்கிடையிலான போட்டி ( இல.2) 87. 08. 07 ஆந் திகதி மு.ப. 9. 00 மணிக்கு விளையாட்டுத் திடல் 2 இலும், காமினி, சமந்தா விளையாட்டுக் கழகங்கட்கிடையிலான போட்டி ( இல. 3) 17. 08. 07 ஆந் திகதி பி ப. 2.00 மணிக்கு 1 ஆம் இலக்க திடலிலும், அதே தினம் பி. ப. 2. 00 மணிக்கு தாரகை, சந்திரன் விளையாட்டுக் கழகங்கட்கிடையிலான போட்டி, ( இல .4 ) 2ம் இலக்க திடலிலும் நடைபெறும். இரண்டாஞ் சுற்று இரு போட்டிகளைக் கொண்டது. (1) ஆம் (2) ஆம் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கிடையிலான போட்டி 1987. 08. 08 ஆந் திகதி மு. ப. 9. 00 மணிக்கு விளையாட்டுத் திடல் இல. 1 இலும், (3) ஆம் (4) ஆம் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கிடையிலான போட்டி 87. 08. 08 ஆந் திகதி மு. ப. 9. 00 மணிக்கு 2 ஆம் இலக்க திடலிலும் நடைபெறும். இவை (5) ஆம் (6) ஆம் இலக்கப் போட்டிகளாகும்.

மூன்றுவது சுற்றில் ஒரு போட்டி மட்டுமே உள்ளது. (7) வது போட்டி அதாவது இறுதிப் போட்டியே இது வாகும். இப்போட்டி 1987. 08. 08. பி. ப. 2. 00 மணிக்கு விளையாட்டுத்திடல். இல. 1 இல் நடைபெறும்.

இதுவரையில் நீங்கள் நிரற்போட்டி அட்டவணையொன்றினை வாசித்து முடித்து விட்டீர்கள், இனி. நிரற்போட்டி அட்டவணையொன்றினைத் தயார்ப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை எனக் கவனிப்போம்.

- போட்டி அடைப்புக் குறிகள் அதனைச் சேர்ந்த இரு குழுக்களுக்குமிடையேயான போட்டியைக் குறிக்கின்றது.
- இவ்வடைக்குறியினுள் போட்டி நடைபெறும். திகதி, நேரம், இடம் என்பன குறிக்கப்படல் வேண்டும்.
- அடைப்புக்குறிக்கு நேராக அடுத்த சுற்றுக்குச் செல்லும் கோடு, அவ்வடைப்புக்குரிய போட்டியில் வெற்றி பெற்ற குழுவை / நபரைக் குறிக்கின்றது.


இவ்விடயம் தொடர்பான ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் நிரற்போட்டி அட்டவணையுடன் ஒப்பிட்ட வாறு மேற்படி விபரங்களை மீண்டும் கற்க.

விலக்கும் முறைக்கு அமைய நடத்தப்படும் நிரற் போட்டியொன்றினை நிறைவு செய்வதற்காக நடத்தப் படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை போட்டியி டும் குழுக்களின் எண்ணிக்கையை விட ஒன்று குறை வானதாகும். எட்டுக் குழுக்கள் போட்டியிடின் 7 போட் களே நடத்தப்படல் வேண்டும். இது தொடர்பாக நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய சமன்பாடு **(n – 1)** என்பதாகும். n என்பது போட்டியில் பங்கு கொள்ளும் குழுக்களின் எண்ணிக்கையாகும். அவ்வெண் ணிக்கையில் இருந்து ஒன்றைக் கழிப்பின், அந்நிரற் போட்டியில் நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை கிடைக்கப்பெறுகின்றது.

அடுத்ததாக நாம் மற்றுமொரு நிரற்போட்டி அட்ட வணையைக் கவனிப்போம். இது 7 குழுக்கள் கலந்து கொள்ளும் ஒரு நிரற் போட்டியாகும்.

அந்நிரற் போட்டிக்கான போட்டி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு அவதானிக்க. 8 குழுக் களைக் கொண்ட போட்டி அட்டவணையை விட இது வேறுபட்டுக் காணப்படுகின்றதல்லவா? போட்டி அட்ட வணைகளை எழுதும் விதம் பற்றிய விளக்கத்தை ஏற்க னவே பெற்றுள்ளமையால் இங்கு உதாரணமாகத் தரப் படும் போட்டி அட்டவணையில் குழுக்களின் இலக்கங் கள் மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளன. போட்டிகள் நடைபெறும் திகதி, நேரம் இடம் போன்ற விபரங் கள் இங்கு தரப்படவில்லை.

**நிரற்போட்டி அட்டவணை.**



இவ்வட்டவணையின் முதற்பகுதியில் 4 குழுக்களும் பிற் பகுதியில் 3 குழுக்களும் உள்ளன. போட்டியிடும் குழுக் களின் மொத்த எண்ணிக்கை ஒற்றைப்பட்டதாக இருப் பின் எப்போதும் முதற்பகுயில் ஒரு குழு கூடுதலாக அமையும் வண்ணம் குழுக்களை வகுத்தல் வேண்டும்.

முதலாவது சுற்றில் ஒரு குழுவுக்கு இடை வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பது மற்றுமொரு விசேட தன்மை யாகும். இடை என்பது, முதற் சுற்றில் போட்டியிடாது நேரடியாகவே இரண்டாவது சுற்றில் போட்டியிட வாய்ப்பளிப்பதாகும். இவ்வாய்ப்பு போட்டி அட்ட வணையில் ஈற்றில் இடம்பெற்றுள்ள 7 வது இலக்கக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இடை வாய்ப்பு எவ்வாறு வழங்கப்படுகின்றது?

நிரற்போட்டி முறையின்போது குழுக்களுக்கு இடை வாய்ப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது என வே இடை வழங்கும் விதம், அதற்காகக் கடைப் பிடிக்க வேண்டிய விடயங்கள் என்பவற்றினை அறிந் திருத்தல் வேண்டும்.

இடைவாய்ப்பு வழங்கும்போது பின்வரும் படிகளைப் பின்பற்றுக.

1 முதலாவதாக, நிரற் போட்டியில் பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்க.

2 குழுக்களின் மொத்த எண்ணிக்கை 2 இன் மடங்கு எண்ணிக்கையொன்றாக அமையாவிடின் இடை வாய்ப்பு வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். குழுக்களின் எண்ணிக்கை 2 இன் மடங்கு எண்ணிக் கையொன்றாக இருப்பின் இடை வாய்ப்பு வழங்கத் தேவையில்லை.

> 2 இன் மடங்கு எண்ணிக்கைகள் எனப்படுபவை 2×2×2×2×2 ..... எனப் பெருக்கும் போது கிடைக்கும் விடை களாகும். இதன்படி 4, 8, 16, 32, 64, 128 போன்றவை இரண்டின் மடங்கு எண்ணிக்கைகளாகும்.

3 இடைவாய்ப்பு வழங்கப்பட வேண்டுமெனின் போட்டியில் பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கை க்கு அடுத்ததாக உள்ள இரண்டின் மடங்கு எண்ணிக்கையை அறிந்து கொள்க.

4 இனி போட்டி 2 இன் மடங்கு எண்ணிக்கையில் இருந்து குழுக்களின் எண்ணிக்கையைக் குறைக்க கிடைக்கும் விடை, வழங்கப்பட வேண்டிய இடை களின் எண்ணிக்கையாகும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை அவதானித்து வழங்கப்படவேண்டிய இடைகளின் எண்ணிக்கை, நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக் கை ஆகியன தொடர்பான உங்களது அறிவை உறுதிப்படுத்திக் கொள்க.

| இல. | நிரற்போட்டியில் பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கை. | அவ்வெண்ணிக்கைக்கு அடுத்த 2இன் மடங்கு எண்ணிக்கை. | வழங்கப்பட வேண்டிய இடைகளை அறிந்து கொள்ளும் முறை. | வழங்கப்பட வேண்டிய இடைகள். | நிரற் போட்டியை நிறைவு செய்வதற்காக நடத்தப்பட வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | | | |
| 2 | 9 | 16 | 8—7 | 1 | 6 |
| 3 | 12 | 16 | 16—9 | 7 | 8 |
| 4 | 24 | 32 | 16—12 | 4 | 11 |
| 5 | 33 | 64 | 32—24 | 8 | 23 |
| | | | 64—33 | 31 | 32 |

மேற்படி அட்டவணையில் 7, 9, 12, 24, 33 ஆகியவற்றுக்கு அடுத்ததாக அமையும் 2 இன் மடங்கு எண்ணிக்கைகள் முறையே 8, 16, 16, 32, 64 என்பனவாகும்.

அடுத்ததாக நாம் ''இடை'' வழங்குவதற்காகப் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்கள் பற்றிக் கவனிப்போம்.


1 விலக்கும் முறையின் போது முதற் சுற்றில் மாத்திரமே 'இடை' வழங்கப்படுகின்றது. அதற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- நிரற் போட்டி ஆரம்பிக்கப்பட முன்னர் வழங்கப்படும் ஓய்வு, யாதேனும் போட்டி நடைபெற்ற பின்னர் வழங்கப்படும் ஓய்வை விட முக்கியத்துவம் குறைந்ததாகும். அதனால், 'இடை' கிடைக்கப் பெருத குழுக்களுக்கு ஏற்படும் பிரதிகூலம் குறைவடைதல்.
- முதற் சுற்றுப் போட்டிகள் ஏனைய சுற்றுக்களின் போட்டிகளைவிட மும்மரம் குறைவானதாகக் காணப்படல்


2 நிரற்போட்டி அட்டவணையில், முதலாவது இடையை போட்டி அட்டவணையின் ஈற்றில் இடம் பெற்றுள்ள குழுவுக்கு வழங்குக. 2 இடைகள் இருப்பின், இரண்டாவது இடையை முதற் பகுதியின் முதலாவது குழுவுக்கு வழங்குக. 3வது இடை இருப்பின், அதனை பிற்பகுதியில் இடை வழங்கப்படாதுள்ள இறுதிக் குழுவுக்கு வழங்குக. அவ்வாறே மேலும் இடைகள் இருப்பின் மேற் பகுதியில் இடை கிடைக்கப்பெருத அடுத்த குழுவுக்கு வழங்குக. இவ்வாறே முடிவடையும் வரை தொடர்ந்தும் வழங்குதல் வேண்டும்.

9 குழுக்களுக்காக அமைக்கப்பட்ட பின்வரும் நிரற் போட்டி அட்டவணையை அவதானித்து, இடை வழங்குதல் தொடர்பான உங்களது அறிவை மேலும் உறுதிப் படுத்திக் கொள்க.

9 குழுக்கள் பங்குபற்றும் நிரற்போட்டியொன்றின் போது வழங்கப்பட வேண்டிய இடைகளின் எண்ணிக்கை 16-9-7 ஆகும், இடைகள் வழங்கப்படும் ஒழுங்கு, உங்களது வசதிக்காகவே இலக்கமிட்டுக் காட்டப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க.




**குழுக்களுக்கு இலக்கங்கள் வழங்குதல். (ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொள்ளல்)**



நிரற்போட்டி அட்டவணையைத் தயார்படுத்தும்போது, குழுக்களுக்கு இலக்கங்கள் வழங்கி, ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதை நீங்கள் விளங்கிக்கொண்டிருப்பீர்கள்.

குழுக்களுக்கு சீட்டிழுப்பு மூலம் இலக்கம் வழங்கப்படுகின்றது. இதனைப் பல வழிகளில் மேற் கொள்ளலாம்.

- குழுக்கள் அனைத்தினதும் பெயர்களை எழுதி, பெட்டியொன்றினுள் இடுக. பின்னர் அவற்றுள் ஒரு சீட்டை வெளியே எடுக்க, அச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவுக்கு *1* ஆம் இலக்கத்தை வழங்குக. இரண்டாவதாக வெளியை எடுக்கும் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவுக்கு இரண்டாம் இலக்கத்தை வழங்குக. இவ்வாறாகவே தொடர்ந்தும் *3,4,5,*.......... என இலக்கங்கள் வழங்குவதன் மூலம் குழுக்களின் ஒழுங்கை அமைத்துக் கொள்ளலாம்.

- குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இலக்கங்களை எழுதி, முன்னர் போன்றே பெட்டியொன்றினுள் இடுக. ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியை அமைத்து, ஒவ்வொரு சீட்டு வீதம் எடுக்கச் செய்து, அவரவர்களது குழுக்களுக்குரிய இலக்கங்கள் தெரிவு செய்து கொள்ள இடமளிக்க அதற்கு ஏற்ப போட்டி அட்டவணையில் குழுக்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

நிரற்போட்டி அட்டவணைகளைத் தயார்ப்படுத்துவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் பற்றிய அடிப்படை அறிவை நீங்கள் பெற்றுள்ளீர்கள்.

1 போட்டி அட்டவணையின் தன்மை.

2 இடை வழங்கும் ஒழுங்கு

3 குழுக்களை ஒழுங்கு நிரற்படுத்தல்.

நீங்கள் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**செயற்பாடு 1**

பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, 11 குழுக்கள் பங்குபற்றும் நிரற் போட்டியொன்றுக்கான போட்டி அட்டவணையொன்றினைத் தயார்ப்படுத்துக.

1 எழுது கடதாசியொன்றினைப் பெற்று அதில் 1 தொடக்கம் 11 வரை மேலிருந்து கீழாக எழுதுக.

2 போட்டியில் கலந்துகொள்ளவுள்ள, கமலம், மல்லிகை, அல்லி, தாமரை, ரோசா, அரசு, ஆல், நா, கண்ணகி, மாதவி, இந்திரா, ஆகிய விளையாட்டுக் குழுக்களின் பெயர்களைச் சீட்டுக்களில் எழுதிப் பெட்டியொன்றினுள் இடுக.

3 அவற்றுள் ஒரு சீட்டை வெளியே எடுக்க. அதில் குறிக்கப்பட்டுள்ள பெயரை இல. 1 க்கு எதிரே எழுதுக. இரண்டாவதாக வெளியே எடுக்கும் சீட்டில் உள்ள பெயரை 2 க்கு எதிரே எழுதுக. இவ்வாறுகவே 11 சீட்டுக்களையும் வெளியே எடுத்து குழுக்களின் பெயர்களை ஒழுங்காக எழுதிக் கொள்க

4 இடைகள் வழங்கப்பட வேண்டுமா எனக் கவனிக்க இடைகள் வழங்கப்பட்ட வேண்டுமெனின் அவற் எண்ணிக்கையை அறிந்து கொள்க.

5 இடைகள் வழங்கப்பட வேண்டுமெனின். கீழ்ப் பகுதி, மேற்பகுதி ஆகியவற்றுக்கு அமைய உரிய குழுக்களுக்கு, இடைகளை வழங்குக.

6 இனி, இடைகள் கிடைக்கப்பெறுத குழுக்களை மேலிருந்து கீழாக சோடி சேர்த்து முதலாம் சுற்று போட்டிகட்காக அடைப்புக் குறிகள் இடுக.

7 இரண்டாம் சுற்றுப் போட்டிகட்குத் தகைமை பெறும் குழுக்களை கோடு மூலம் இரண்டாம் சுற்றுக்குக் கொண்டு சென்று அக்குழுக்களுக்கிடையே நடத்தப்படவேண்டிய போட்டிகளை அடைப்புக் குறிகள் மூலம் காட்டுக. ஒவ்வொரு சுற்றிலும் வெற்றி பெறுவோர் அதற்கடுத்த சுற்றுக்குச் செல்வர். இவ்வாறுக இறுதிவரை நடத்தப்பட் வேண்டிய போட்டிகளை அடைப்புக் குறிகள் மூலம் காட்டுக.

8 போட்டி நடத்தப்படும் திகதி, நேரம், இடம் ஆகிய விபரங்களை உங்களது விருப்பப்படி உரிய இடங்களில் எழுதுக.

(இதற்காக இரண்டு விளையாட்டுத் திடல்கள் தேவைப்படுகின்றமையைக் கவனத்திற் கொள்க)

இப்போது நீங்கள், நிரற் போட்டிக்கான போட்டி அட்டவணையைத் தயார்ப்படுத்தி முடித்துவிட்டீர்கள். நீங்கள் தயார்ப்படுத்திய அட்டவணையை 9.0 இன் கீழ்த் தரப்பட்டுள்ள அட்டவணையுடன் ஒப்பிடுங்கள். குழுக்களின் ஒழுங்குமுறை, போட்டி நடத்தப்படும் திகதி, நேரம், இடம் என்பன தவிர்ந்த ஏனைய விபரங்கள் யாவும் ஒன்றையொன்று ஒத்ததாக காணப்படல் வேண்டும். அவ்வாறின்றேல் அட்டவணைகள் இரண்டினையும் படிப்படியாக ஒப்பிட்டுத் தவறுகளைத்திருத்திக் கொள்ளவும்.

பொதுவான முறையில் குழுக்களை ஒழுங்கு படுத்தி விலக்கும் முறைப்படி நிரற்போட்டியட்டவணையொன்றினைத் தயாரிப்பது தொடர்பான போதிய விளக்கத்தை இதுவரை நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள். குழுக்களை ஒழுங்கு முறையில் வரிசைப் படுத்தி அமைக்கும்போது, சீட்டிழுப்பு முறையைக் கையாண்டு குழுக்களின் திறமைக்கு ஏற்ப அவற்றைத் தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி வரிசைப்படுத்துதல் மிகப் பொருத்தமானதாகும். அதற்கான காரணங்கள் யாவை எனக் கவனிப்போம்.

சீட்டுக்குலுக்கும் முறை நியாயமானதொரு முறையாகத் தோன்றினும் கூட திறமை மிக்க இரு குழுக்கள் அருகருகே இடம் பெறுவதால் முதற் சுற்றுக்களின் போதே அவர்களுக்கிடையே போட்டி நடைபெற இடமேற்படும். எனவே திறமைமிக்க ஒரிரு குழுக்கள் முதற் சுற்றின்போதே விலக்கப்பட வேண்டி ஏற்படும். திறமை மிக்க குழுக்கள் இவ்வாறுக வெளியேறும் போது திறமை குறைந்த குழுவொன்று, சிலவேளைகளில் இறுதிப் போட்டி வரையிலும் கூட போட்டியிடக்கூடிய வாய்ப்புக் கிடைக்கக் கூடும். அந்நிரற் போட்டியில் கலந்து கொள்ளும் திறமை மிக்க இரு குழுக்கள் முதற் சுற்றுப் போட்டியொன்றில் பங்குபற்றக்கூடிய நிலையும் ஏற்பட வாய்ப்பு உண்டு. இலக்கம் வழங்கும்போது ஏற்படக் கூடிய இக்குறைபாட்டை நிவிர்த்திப்பதற்காக, குழுக்களைத் தெரிவு செய்து போட்டி அட்டவணையைத் தயாப் படுத்தும் முறை கையாளப்படுகின்றது.

**குழுக்களைத் தெரிவு செய்து போட்டி அட்டவணையைத் தயார்படுத்தும் விதம்**

இம்முறைக்கு ஏற்ப, திறமைமிக்க குழுக்களைத் தெரிவு செய்து, அக்குழுக்கள் ஒன்றையொன்று முதற் சுற்றுக்களில் எதிர்த்துப் போட்டியிடா வண்ணம், உரிய பரிதியின் முறையே முதலாவது இறுதி இலக்கங்கள்

அவற்றுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாருக தெரிவு செய்யும் போது விசேடமாகக் கவனத்திற் கொள்ளப் படும் விடயம் குழுக்களின் திறமையேயாகும் என்பதை மனதில் இருத்திக் கொள்க. முன்னைய போட்டிகளின் போது காட்டியுள்ள திறமை, குழுக்கள் தொடர்பாகப் பெறப்பட்டுள்ள உண்மையான தகவல்கள் என்பவற் றுக்கு ஏற்ப, ஒழுங்கமைப்பாளர்களால் திறமைமிக்க குழுக்கள் தெரிவு செய்யப்படும். திறமைமிக்க குழுக் களைப் போட்டி அட்டவணையில் புகுத்தும் போது, அவற்றின் திறமைக்கு ஏற்ப ஒழுங்கு முறைப்படி ''இடை'' கிடைக்கப் பெரும்பான்மை இலக்கம் வழங் கப்படல் வேண்டும். இவ்வாருக அவற்றுக்கு 'இடை' வழங்கிய பின்னர் மேலும் 'இடை' கள் மீதாமாய் இருப்பின், தூரத்தே இருந்து வருகை தரும் குழுக்க ளுக்கும் அவை கிடைக்கப் பெறும் வண்ணம் இலக்கம் வழங்கப்பட வேண்டும். என்பதையும் நினைவில் வைத் திருக்கவும்.

குழுக்களை ஏன் தெரிவு செய்து ஒழுங்குபடுத்துதல் வேண்டும்? அவ்வாருகத் தெரிவு செய்யும் அடிப்படை யாது? ஆகியன தொடர்பான விபரங்களை இதுவரையில் நீங்கள் அறிந்து கொண்டீர் கள். முதற் பகுதிக்காகத் தெரிவு செய்து கொண்ட குழுக்கள் முதற் சுற்றுக்களின் ஒன்றையொன்று எதிர்த் துப் போட்டியிட வேண்டி ஏற்படும். நியாயமற்ற நிலைமையைத் தவிர்ப்பதற்காக வேண்டி, போட்டி அட்டவணை இரண்டு அல்லது நான்கு பகுதிகளாக வகுக்கப்படுகின்றது. திறமைமிக்க, 4 குழுக்கள் தெரிவு செய்யப்படின் அட்டவணை 2 பகுதிகளாகவும் திறமை மிக்க 8 குழுக்கள் தெரிவு செய்யப்படின் அட்டவணை 4 குழுக்களாகவும், வகுக்கப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க. திறமைமிக்க 4 குழுக்கள் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் போட்டி அட்டவணை யைத் தயார்ப்படுத்தும் விதத்தை முதலில் கவனிப் போம்.

**திறமைமிக்க 4 குழுக்கள் கொண்டதும் மொத்தம் 11 குழுக்களுக்கானதுமான போட்டி அட்டவணையைத் தயாரிக் கும் முறை.**

இதற்காக போட்டி அட்டவணையை இரு பகுதிகளாக வகுக்க வேண்டுமென்பதை நீங்கள் அறிவீர்கள். 11 குழுக்கள் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் முதற் பகுதி யில் 6 குழுக்கள் இடம் பெறும். கீழ்ப்பகுதியில் 5 குழுக் கள் இடம் பெறும். (வழங்கப்பட வேண்டிய 'இடை' களின் எண்ணிக்கை 5 ஆகும்.)

இனி நாம் இக்குழுக்களை, சமனல, களனி, வளவை, விஜித, மிதர, சூர, மகசென், மகாவலி, மினிகிரி, வீர எனப் பெயரிடுவோம். இக்குழுக்களுள் கடந்த வருடம் முதலாம், இரண்டாம் இடங்களை முறையே

களனி, மகசென் ஆகிய கழகங்சள் பெற்றன எனக் கொள்வோம். தகவல்களின் படி, வீர, சமனல ஆகிய கழகங்களும் 'திறமை' மிக்கனவாகும். விஜித தூரப் பகுதியிலிருந்து வருகை தரும் ஒரு கழகமாகும் எனக் கொள்வோம்.


இதற்கு ஏற்ப

- முதலாவது இடை, களனி விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்படல் வேண்டும். கீழ்ப்பகுதியின் இறுதி இலக்கத்தை அக்கழகத்துக்கு வழங்குக.
- இரண்டாவது இடை; மகசென் கழகத்துக்கு வழங்கப்படல் வேண்டும். முதற் பகுதியின் மிகக் கீழே உள்ள இலக்கத்தை அக்கழகத்துக்கு வழங்குக.
- மூன்றாவது இடை - வீர கழகத்துக்குரியது. கீழ்ப் பகுதியில் மிக மேலே உள்ள இலக்கத்தை அதற்கு வழங்குக.
- நான்காவது இடை - சமனல கழகத்துக்குரியது. முதற் பகுதியில் மிக மேலே உள்ள இலக்கத்தை அதற்கு வழங்குக.

இடுத்த இடையைத் தூரப் பிரதேசத்தில் இருந்து வருகை தரும் விஜித கழகத்துக்கு வழங்குக. ஏனைய குழுக்களைச் சீட்டிழுப்பு மூலம் வகுக்க.

மேற்படி விபரங்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட போட்டி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானியுங்கள்.

**அட்டவணை.**



## காற்பகுதியாக்கும் முறை

8 குழுக்களைத் தெரிவு செய்து போட்டி அட்டவணை யொன்றினைத் தயாரிக்கும் போது அக்குழுக்களை 4 பகுதி களாக வகுத்தல் வேண்டுமென முன்னர் குறிப்பிடப் பட்டது. பங்குபற்றும் குழுக்களை நான்கு பகுதிகளாக வகுக்கும் முறைபற்றி அடுத்ததாகக் கவனிப்போம். இது காற்பகுதி முறை என அழைக்கப்படுகின்றது.

போட்டி அட்டவணை மேற்பகுதி, கீழ்ப்பகுதி என இரண்டு பிரிவுகளாக வகுக்கப்படுவதை நீங்கள் அறி வீர்கள். அவ்விரு பகுதிகளையும் மேலும் இவ்விரு பகுதி களாக வகுப்பதன் மூலம் அதனை 4 பகுதிகளாக அமைக் கலாம். பின்வரும் அட்டவணையை நன்கு அவதானிக்க ஒவ்வொரு பகுதிக்குமான குழுக்களை வகுக்கும் விதத்தை அதன் உதவியுடன் விளங்கிக் கொள்ளுங்கள்.

**அட்டவணை.**


| பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கை | 4 பகுதியாா வகுத்தபின் னர் மீதி. | i வது காற்பகுதி யில் இடம்பெற வேண்டிய குழுக் களின் எண்ணிக் கை. (மேல்-மேற் பகுதி) | ii வது காற் பகுதியில் பெற வேண்டிய குழுக் களின் எண்ணிக் கை (மேல் கீழ் பகுதி) | iii வது காற் பகுதியில் இடம் பெறவேண் டிய குழுக்களி ன் எண்ணிக் கை (கீழ் மேல் பகுதி) | iv வது பகுதியில் பகுதியில் இடம் பெற வேண்டிய குழுக்களின் எண் ணிக்கை (கீழ் - கீழ் பகுதி |
|---|---|---|---|---|---|
| 20 | $\frac{20}{4} = 5 - 0$ | 5 | 5 | 5 | 5 |
| 21 | $\frac{21}{4} = 5 \cdot 1$ | 5 + 1 = 6 | 5 | 5 | 5 |
| 22 | $\frac{22}{4} = 5 - 2$ | 5 + 1 = 6 | 5 | 5 + 1 = 6 | 5 |
| 23 | $\frac{23}{4} = 5 \cdot 3$ | 5 + 1 = 6 | 5 + 1 = 6 | 5 + 1 = 6 | 5 |

அடுத்ததாக நாம் 22 குழுக்களைக் கொண்ட நிரற் போட்டியொன்றுக்கான போட்டி அட்டவணையொன் றினைத் தயாரிப்போம்.

இங்கு வழங்கப்படவேண்டிய இடைகளின் எண்ணிக்கை 10 ஆகும் திறமைமிக்க 10 குழுக்கள் காணப்படுவதே இதற்கான காரணமாகும். எனவே இக்குழுக்கள் 22 ஐயும் பின்வருமாறு நான்கு பகுதிகளாக வகுத்தல் வேண்டும்.

- முதலாவது காற்பகுதிக்கு 6 குழுக்கள்.
- இரண்டாவது காற்பகுதிக்கு 5 குழுக்கள்.
- மூன்றுவது காற்பகுதிக்கு 6 குழுக்கள்
- நான்காவது காற்பகுதிக்கு 5 குழுக்கள்

நிரற்போட்டியில் கலந்து கொள்ளும் குழுக்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படியும், முன்பு நடத்தப்பட்ட போட்டிகளின் அடிப்படையிலும் நோக்குகையில் புது வாஸனு, சுகத, திமுனு, திஸ்ஸ, தீர, எக்ஸத் ஆகிய குழுக்கள் சமதிறமையுடைய குழுக்களாகும். மகசென் குழு மாத்திரமே தூரப் பிரதேசத்திலிருந்து வருகை தருகின்றது. இக்குழுக்கள் 9 உம் சம திறமையுடையவையாகையால், சீட்டிழுப்பு முறைப்படி 22, 18, 17, 12, 10, 11, 7, 6, 1 ஆகிய இலக்கங்கள் அவற்றுக்கு வழங்கப்பட்டன. தூரத்தில் இருந்து வருகை தரும் குழுவுக்கு 21 ஆம் இலக்கம் வழங்கப்பட்டது. ஏனைய இலக்கங்கள் சீட்டிழுப்பு முறைக்கு அமைய அவ்வக்குழுக்களுக்கு வழங்கப்பட்டன. அதற்கு ஏற்பத் தயாரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணையைக் கவனியுங்கள்.




விலக்கு முறைக்கு ஏற்ப, எவ்விதத்திலானதும், எத்தனை குழுக்களைக் கொண்டதுமான நிரற் போட்டி அட்டவணைகளைத் தயாரிப்பது தொடர்பான தெளிவான விளக்கத்தை இதுவரையில் நீங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

அடுத்ததாக நாம் நிரற்போட்டியொன்றின் போது, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் போட்டிகள் எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனக்கவனிப்போம்.

1 இறுதிப் போட்டி: இப்போட்டியில் இரு குழுக்கள் மாத்திரமே பங்குபற்றும். மேற்படி போட்டி அட்டவணையில் V ஆம் சுற்றுப் போட்டி இது வாகும்.

2 அரையிறுதிப் போட்டி: இரு போட்டிகள் நடைபெறும் 4 குழுக்கள் பங்கு பற்றும். மேற்படி போட்டி அட்டவணையில் iv ஆம் சுற்றுப் போட்டிகள் இரண்டும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன.

3 காலிறுதிப் போட்டி 4 போட்டிகள் நடைபெறும் 8 குழுக்கள் கலந்து கொள்ளும் அட்டவணையில் iii ஆம் சுற்றுப் போட்டிகளே' இவையாகும்.

4. முதற்போட்டிகள்: இவை ஆரம்பப் போட்டிகளாகும். காலிறுதிப் போட்டிகளுக்கு முன்னர் நடைபெறும்போட்டிகளனைத்தும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. மேலே தரப்பட்டுள்ள போட்டி அட்டவணையின் i ஆம் ii ஆம் சுற்றுப் போட்டிகள் இவ்வகைவைச் சேர்ந்த போட்டிகளாகும்.

நீங்கள் இதுவரை கற்ற விடயங்களை நினைவுப்படுத்துவதற்காக அவற்றைச் சுருக்கமாகத் தருகின்றோம். இதனை கவனமாக வாசியுங்கள்.

நிரற்போட்டிகளை இரு முறைகளில் நடத்தலாம். விலக்கல் முறை, லீக் முறை, என்பனவே அவையாகும். விளக்கல் முறையின் போது, போட்டியில் ஈடுபட்டுத் தோல்வியடையும் குழுக்கள் நிரற்போட்டியிலிருந்து நீக்கப்படுகின்றன. வெற்றி பெறுபவர்கள் தொடர்ந்தும் விளையாடியபடி முன்னேறிச் செல்கினறனர். இறுதியாக வெற்றிபெறுபவருக்கு அல்லது குழுவுக்கு முதலிடம் கிடைக்கின்றது. போட்டி அட்டவணைகளைத் தயாரிக்கும் போது இரண்டின் மடங்கு எண்ணிக்கையான (8,16,32) குழுக்கள் போட்டிகளின் ஈடுபடாவிடின் (''இடை'' வழங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முதலாவது சுற்றில் மாத்திரமே 'இடை' வழங்கப்படுகின்றது. நிரற்போட்டியில் கலந்து கொள்ளும் குழுக்களின் மொத்த எண்ணிக்கைக்கு அடுத்ததாக உள்ள இரண்டின் மடங்கு எண்ணிக்கையில் இருந்து குழுக்களின் எண்ணிக்கையைக் கழித்துப் பெறும் விடையே, ''இடைகளின்' எண்ணிக்கையாகும். பொதுவான முறைப்படி சீட்டிழுப்பின் மூலம் குழுக்களைத் தெரிவு செய்து போட்டி அட்டவணையைத் தயாரிக்கலாம். அல்லது திறமையின் அடிப்படையில் குழுக்களை ஒழுங்கு முறைப்படி அமைத்து அட்டவணையைத் தயாரிக்கலாம்.

விலகல் முறைப்படி நிரற்போட்டிகளை ஒழுங்கமைப்பது தொடர்பாக இதுவரையில் நீங்கள் பெற்றுக்கொண்ட விளக்கத்தை நீங்களாகவே சோதித்துப் பார்க்கும் பொருட்டு பின்வரும் செவ்வைபார்த்தலைச் செய்க.

செவ்வை பார்த்தல் 2

மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1 நிரற்போட்டி ஒழுங்கமைப்பில், விலக்கும் முறையினது விசேடமான தன்மை யாது?

1 தெரிவு செய்து கொண்ட குழுக்களுக்கு 'இடை' வமங்குகல்.

2 தோல்வியுற்ற குழுக்கள் நிரற்போட்டியிலிருந்து விலக்கப்படல்.

3 திறமையற்றோரை, இரண்டாஞ் சுற்றுக்கு அனுப்புதல்.

4 குழுக்கள் ஒவ்வொன்றுக்குமிடையே போட்டிகளை நடத்தல்.

2 போட்டி அட்டவணையொன்றின் சோடி அடைப்புக்குறி எதனைக்குறிக்கின்றது?

1 போட்டியில் வெற்றி பெற்றோரை.

2 அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுவதை.

3 குழுக்களிரண்டுக்குமிடையே போட்டியொன்று நடைபெறுவதை.

4 தோல்வியடைந்தோர் விலக்கப்படுவதை.

3 தெரிவு செய்து கொண்ட திறமைமிக்க குழுக்களுக்கும் தூரத்தே இருந்து வருகை தரும் குழுக்களுக்கும் 'இடை' வழங்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய மிக முக்கிய விடயம் யாது?

1 அவர்கள் பயணஞ்செய்ய வேண்டிய தூர அளவு.

2 குழுக்களின் அனுபவம்

3 குழுக்களின் திறமை.

4 குழுக்களின் மீதுள்ள விருப்பு.

4 நிரற்போட்டியின்போது வழங்கப்படும் 'இடை' எனப்படுவது யாது?

1 போட்டியின்றி வெற்றி பெறலாகும்.

2 போட்டியிடாது அடுத்த சுற்றுக்குச் செல்லத் தகுதி பெறலாகும்.

3 போட்டியிடாது இறுதிப்போட்டிக்குத் தெரிவாதலாகும்.

4 திறமைமிக்க குழுவென ஏற்றுக் கொள்ளப்படுதலாகும்.

5 12 குழுக்கள் பங்குபற்றும் நிரற்போட்டியொன்றில் வழங்கப்படவேண்டிய இடைகளின் எண்ணிக்கை யாது?

i : 2

ii : 3

iii : 4

iv : 6

6 12 குழுக்கள் போட்டியிடும் நிரற்போட்டியொன்றினை நிறைவு செய்வதற்காக நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை யாது?

i : 6

ii : 14

iii : 24

iv : 11

சரியான விடைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன. உங்களது விடைகளை ஒப்பிட்டுத் தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள்

## பகுதி iii

இதுவரையில் நாம் விலக்கல் முறைப்படி நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைப்பது பற்றியும் போட்டி அட்டவணை தயாரிப்பது பற்றியும் கலந்துரையாடினோம். அடுத்ததாக, லீக் முறையில் போட்டி அட்டவணையொன்றினைத் தயாரிக்கும் விதத்தைக் கவனிப்போம்.

## 5.0 லீக் முறை – ஒழுங்கமைத்தல்

லீக் முறையில் ஒழுங்கமைக்கப்படும் நிரற்போட்டியில் பங்குபற்றும் சகல குழுக்களும் ஏனைய ஒவ்வொரு குழுக்களுடனும் போட்டியிடுதல் வேண்டும். இவ்வாறான நிரற்போட்டிகளில் புள்ளி அடிப்படையிலேயே வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவர். நிரற்போட்டிக்காக நீண்ட காலத்தைச் செலவு செய்யக்கூடிய, குறைந்த எண்ணிக்கை குழுக்களைக் கொண்ட குறிப்பிட்ட நேர எல்லைக்குள் நிறைவு செய்யக்கூடிய விளையாட்டுக்களுக்கே இம்முறை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.

போட்டி அட்டவணையொன்றினைத் தயாரிக்கையில் நடத்தப்பட வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கையை அறிந்திருத்தல் பயனுடையதாகும். பின்வரும் படிகளைப் பின்பற்றுவதன் மூலம் அதனை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

i குழுக்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்க.

ii அவ்வெண்ணிக்கையில் இருந்து ஒன்றைக் கழிக்க.

iii பின்னர் அவ்விடையை குழுக்களின் எண்ணிக்கை யால் பெருக்குக.

iv கிடைக்கும் விடையை இரண்டால் வகுக்குக.

கிடைக்கும் விடையே நீங்கள் நடத்த வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கையாகும். மேற்குறிப்பிட்ட படிமுறைகள் நான்கினையும் சமன்பாட்டின் மூலம் பின் வருமாறு காட்டலாம்.

$\frac{n(n-1)}{2}$ = நிரற்போட்டியை நிறைவு செய்வதற்காக நடத்தப்பட வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை. (n என்பது போட்டியிடும் குழுக்களின் எண்ணிக்கையாகும்.

இனி இச்சூத்திரத்தை 6 குழுக்ககளைக்கொண்ட நிரற் போட்டியொன்றுக்காகப் பயன்படுத்துவோம்.

$\frac{6(6-1)}{2} = \frac{6 \times 5}{2} = 15$ ஆகும்.

லீக் முறை நிரற்போட்டியின்போது நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கையை இலகுவாக உங்களால் கணித்துக்கொள்ள முடியுமல்லவா? இனி லீக் முறையின்படி குழுக்கள் ஒன்றுடனொன்று போட்டியிடும் விதத்தைக் கவனிப்போம்.

**லீக் முறைப்படி:**

**போட்டி அட்டவணையொன்றினைத் தயார்படுத்துதல்,**

6 குழுக்கள் மாத்திரம் பங்குபற்றுகின்றன எனக் கொண்டே இப்போட்டி அட்டவணை தயார்படுத்தப் பட்டுள்ளது. பங்குபற்றும் குழுக்களுக்கு சீட்டிழுப்பு முறைப்படி இலக்கம் வழங்கி, அவ்விலக்கங்களை பின் வருமாறு அட்டவணைக்கு ஏற்ப பிரயோகித்தல் வேண்டும்.

1 – 6 (இல - 1 இல 6 உடன் போட்டியிடும்)

2 – 5 (இல – 2 இல 5 உடன் போட்டியிடும்)

3 – 4 (இல – 3 இல 4 உடன் போட்டியிடும்)

முதற்சுற்றுப் போட்டிகட்கான அட்டவணையையே மேலே நீங்கள் தயார்படுத்தியுள்ளீர்கள். அதற்கு ஏற்ப 1 வது குழு 6 வது குழுவுடனும், 2 வது குழு 5 வது குழுவுடனும், 3 வது குழு 4 வது குழுவுடனும் போட்டியிடும். அடுத்த சுற்றுக்களில் போட்டியிடும் குழுக்களை ஒழுங்கமைப்பதற்காக, 1வது இலக்கத்தை அதே இடத்தில் விட்டு வைத்து ஏனைய இலக்கங்களை ஒழுங்கு முறைப்படி, ஒரே திசையில் சுழற்றி இடமாற்றுக. கீழே அம்புகுறிகள் இடப்பட்டுள்ள, போட்டி அட்டவணைகளில் இலக்கங்கள் (இடங்கள்) மாற்றப்பட்டுள்ள விதத்தை நன்கு கவனிக்க. முதற்சுற்றில் பங்குபற்றிய குழுக்கள் இரண்டாவது சுற்றில் பெற்றுள்ள இடங்களை அவதானித்து ஒப்பிட்டுப்பார்க்க.

| சுற்று i | சுற்று ii | சுற்று iii | சுற்று iv | சுற்று v |
|---|---|---|---|---|
| 1 - 6 | 1 - 2 | 1 - 3 | 1 - 4 | 1 - 5 |
| 2 - 5 | 3 - 6 | 4 - 2 | 5 - 3 | 6 - 4 |
| 3 - 4 | 4 - 5 | 5 - 6 | 6 - 2 | 2 - 3 |

இரண்டாம் சுற்றின்போது இல 2, இல. 6 இன் இடத்துக்கும், இல 6, இல 5 இன் இடத்துக்கும் இலக்கம் 5 இல. 4 இன் இடத்துக்கும் இல. 4, இல. 3 இன் இடத்துக்கும் இலக்கம் 3 இல. 2 இன் இடத்துக்கும் இடம்மாறியுள்ளன. ஏனைய சுற்றுக்களின் போதும் இவ்வாறே ஒழுங்கு முறை மாறுவண்ணம் இடமாற்றப் பட்டுள்ளது. இம்முறைக்கு ஏற்ப போட்டியிடும் சகல குழுக்களும் ஏனைய ஒவ்வொரு குழுவுடனும் போட்டியிடுதல் வேண்டும்.

இரட்டை எண்ணிக்கையான குழுக்கள் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் பற்றியே நாம் இதுவரை கலந்துரையாடினோம். இனி ஒற்றை எண்ணிக்கைக் குழுக்கள் போட்டியில் கலந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தைக் கவனிப்போம். குழுக்களின் எண்ணிக்கை ஒற்றை எண்ணாக இருப்பின் ஒவ்வொரு சுற்றிலும் ஒரு குழுவுக்கு 'இடை' வழங்கப்படல் வேண்டும்.

இடையின் இடத்தை மாற்றாது, குறிப்பிட்ட போட்டிகள் நிறைவடையும் வரை முன்னைய அட்டவணையில் காட்டியது போன்றே ஏனைய குழுக்களின் ஒழுங்கைக் குழப்பாது இடமாற்றுதல் வேண்டும். இனி 5 குழுக்களுக்கான போட்டி அட்டவயொன்றினை அமைப்பது பற்றிக் கவனிப்போம். நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை 10 ஆகும் ஒவ்வொரு சுற்றிலும் ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ள இடை தவிர்ந்த ஏனைய வரிசைகட்கு ஏற்ப, நடத்தப்படவேண்டிய போட்டிகளைக் கணிப்பதன் மூலம் மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளலாம். 5 குழுக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள போட்டி அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு அவதானிக்க.

| சுற்று i | சுற்று ii | சுற்று iii | சுற்று iv | சுற்று v |
|---|---|---|---|---|
| இடை. 1 | இடை 2 | இடை 3 | இடை 4 | இடை 5 |
| 2 - 5<br>3 - 4 ] 2 | 4 - 5<br>3 - 1 ] 2 | 4 - 2<br>5 - 1 } 2 | 5 - 3<br>1 - 2 } 2 | 1 - 4<br>2 - 3 } 2 |

2 + 2 + 2 + 2 + 2 = 10

மொத்தப் போட்டிகள் = 10

இதுவரை நீங்கள் கற்றவற்றைக் கொண்டு எத்தனை குழுக்களைக் கொண்ட நிரற்போட்டிகட்காகவும் போட்டி அட்டவணைகளைத் தயாரிக்கக் கூடியதாக இருக்குமல்லவா? இன்றேல் மேற்படி விபரங்களை மீண்டுமொரு தடவை கவனமாக வாசியுங்கள்.

போட்டி அட்டவணைகளைத் தயாரிப்பது தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொண்ட நீங்கள் அடுத்ததாக, வெற்றியாளரைத் தெரிவு செய்யும் முறைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? இனி அது பற்றிக் கவனிப்போம்.

### லீக் முறைக்கு ஏற்ப வெற்றியாளரைத் தெரிவு செய்தல்

புள்ளி அடிப்படையிலேயே வெற்றியாளர் தெரிவு செய்யப்படுகின்றமையை நீங்கள் அறிவீர்கள். புள்ளித் திட்டம் ஒழுங்கமைப்பாளர்களால் தீர்மானிக்கப்படும் உதாரணமாக, வெற்றி பெறும் குழுவுக்கு 2 புள்ளியும் வெற்றி தோல்வி இன்றி முடிவுறும் போட்டிகட்கு இரு குழுவினருக்கும் ஒரு புள்ளி வீதமும், தோல்வியடையும் குழுவுக்கு 0 உம் வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்படும்.

இனி 4 குழுக்கள் போட்டியிடும் நிரற்போட்டியொன்றினை உதாரணமாாக் கொண்டு, வெற்றியாளரைத் தெரிவு செய்யும் முறையைக் கவனிப்போம்.

அதற்காகப் பின்வரும் அட்டவணையைக் கவனியுங்கள்.

| சுற்று i | சுற்று ii | சுற்று iii |
|---|---|---|
| 1 — 4 | 1 — 2 | 1 — 3 |
| 2 — 3 | 3 — 4 | 4 — 2 |

ஒவ்வொரு குழுவும் ஏனைய ஒவ்வொரு குழுவுடனும் போட்டியிட வேண்டுமென்பது இதிலிருந்து தெளிவாகின்றதல்லவா? எனவே நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை 6 ஆகும். அப்போட்டிகளில் குழுக்கள் பின்வரும் விதத்தில் வெற்றி பெறுகின்றன எனக் கொள்வோம். உங்கள் வசதிக்காக ஒவ்வொரு சுற்றிலும் வெற்றி பெற்ற குழுக்கள் அட்டவணைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. குழுக்கள் பெற்ற புள்ளிகள் அதன் கிழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

### வட்டங்களுக்கு ஏற்ப பெற்ற புள்ளிகள்.

| சுற்று i பெறுபேறும் புள்ளிகளும் | சுற்று ii பெறுபேறும் புள்ளிகளும் | சுற்று iii பெறுபேறும் புள்ளிகளும். |
|---|---|---|
| 1-ஆம் 4-ஆம் குழுக்களுக்கிடையிலான பாட்டியில் வெற்றி வது குழுவுக்கு<br><br>2 ஆம் 3-ஆம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் வெற்றி 2-ஆம் குழுவுக்கு. | 1-ஆம் 2-ஆம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் வெற்றி குழுவுக்கு<br><br>3 ஆம் 4-ஆம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் வெற்றி 3அம் குழுவுக்கு | 1-ஆம் 3-ஆம் குழுக்களுக்கிடையிலான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.<br><br>2-ஆம் 4-ஆம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் வெற்றி 4-ஆம் குழுவுக்கு. |
| அதற்கு ஏற்ப கிடைக்கும் புள்ளிகள். | அதற்கு ஏற்ப கிடைக்கும் புள்ளிகள். | அதற்கு ஏற்ப கிடைக்கும் புள்ளிகள். |
| இல. 1—02 புள்ளி<br>4—00 ,,<br>2—02 ,,<br>3—00 ,, | இல. 1—02 புள்ளி<br>2—00 ,,<br>3—02 ,,<br>4—00 ,, | இல. 1—01 புள்ளி<br>2—01 ,,<br>3—02 ,,<br>4—00 ,, |

### சுற்றுக்களுக்கும் குழுக்களுக்கும் ஏற்ப தயார்ப்படுத்தப் பட்ட புள்ளிப் படிவம்.

| இல. | குழுவின் பெயர் | சுற்று | சுற்று ii | சுற்று iii | மொத்தப் புள்ளி | பெறுபேறு |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 2 | 1 | 05 | 1 |
| 2 | | 2 | 0 | 0 | 02 | 3 |
| 3 | | 0 | 2 | 1 | 03 | 2 |
| 4 | | 0 | 0 | 2 | 02 | 3 |

சில சந்தர்ப்பங்களில், போட்டியில் ஈடுபடும் குழுக்கள் பெறும் புள்ளிகள் சமனுக அமையக்கூடும். அவ்வாருன சந்தர்ப்பங்கள் பிரச்சினை தாக்கப்படல் வேண்டும். இது ''சமமுடிவு தீர்த்தல்'' என அழைக்கப்படுகின்றது. சம முடிவு நிலைகளைத் தீர்க்கும் வழிவகைகள் போட்டியின் சட்டதிட்டங்களில் அடங்கியிருக்கும்.

சமமுடிவு தீர்ப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக் கைகள்

i சமபுள்ளி பெற்ற குழுக்கள் அனைத்துக்கும் வெற் றியைச் சமனாய் வழங்குதல்,

ii நிரற்போட்டியில் அதிக எண்ணிக்கை வெற்றிக ளைக் பெற்ற குழுவுக்கு முதலிடம் வழங்குதல்.

iii நிரற்போட்டியின் போது, பெற்றுக் கொண்ட வர்களுக்கு எதிராக ஏனைய குழுக்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளையும் கருத்திற்கொண்டு வெற் றியாளரைத் தெரிவு செய்தல்.

iv சம முடிவு பெற்றுள்ள குழுக்களிரண்டையும் மீண்டும் போட்டியிடச் செய்தல்.

இதுதொடர்பாக பின்வரும் உதாரணங்களைக் கவன மாக அவதானியுங்கள்.

மேலே ii இல் குறிப்பிட்ட வழிவகைக்கான உதார ணமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

**கரப்பந்தாட்டப் போட்டியொன்றின் போது:**

நிரற்போட்டியின் போது,

| | | | |
|---|---|---|---|
| பிரீதி குழு:- | தடவைகள் | | வித்தியாசம் |
| வெற்றிபெற்ற தடவைகள் | 15 | — | 3 |
| தோல்வியடைந்த ,, | 03 | | 12 |
| ரமகி குழு: | | | |
| வெற்றிபெற்ற | 14 | — | 10 |
| தோல்வியடைந்த ,, | 04 | — | |

இதன்மூலம் பிரீதி குழு திறமைமிக்க குழு என தீர் மானிக்கப்படுகின்றது.

iii வது வகையைச் சேர்ந்த உதாரணமொன்றைக் கவனிப்போம்:-

**வலைப்பந்தாட்டப் போட்டியொன்றின் போது,**

| | | | |
|---|---|---|---|
| பிரகதி குழு | | | வித்தயாசம் |
| பெற்ற முழுப்புள்ளி | 120 | - | 30 |
| எதிர்க்குழு பெற்ற முழுப்புள்ளி | 90 | | |
| சமகி குழு- | | | |
| பெற்ற முழுப்புள்ளி | 121 | - | 31 |
| எதிர்க்குழுவினர் பெற்ற முழுப்புள்ளி | 90 | | |

## விலக்கும் முறையினதும் லீக் முறையினதும் நன்மை தீமைகள்

இங்கு சமகி திறமை மிக்க குழு எனத்தீர்மானிக்கப் படுகின்றது. இவ்வாறாக, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் திட்ட வட்டமாக நிரற்போட்டியின் சட்டதிட்டங்களில் புகுத்தப்பட்டிருக்கும். நிரற்போட்டிகளை ஒழுங்கமைப் புச் செய்யும் பிரதானமான இரண்டு முறைகள் பற் றிய விளக்கத்தை இதுவரையில் நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள். நிரற்போட்டிகளை ஒழுங்கமைக்கையில் இம்முறைகளின் நன்மை தீமைகளை அறிந்து வைத்தி ருத்தல் பயனுடையதாகும். எனவே அவை பற்றியும் அறிந்து கொள்வோம்.

நிரற்போட்டிகளின் போது, போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கட்கும், பார்வையாள ருக்கும் ஒழுங்கமைப்பாளர்கட்கும் இந்நன்மை தீமை கள் கிடைக்கப்பெறுகின்றன. அவகளது எதிர்பார்ப் புக்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் இந்நன்மை தீமைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின் றன

முதலாவதாக விலக்கும் முறையின் நன்மை தீமைகளை கவனிப்போம்.

## விலக்கும் முறையின் நன்மைகள்

1 நிரற்போட்டியொன்றினை நடத்தி முடிப்பதற்காக நடத்தப்பட வேண்டிய போட்டிகளின் எண் ணிக்கை குறைவானதாகையால், நிரற்போட்டியை குறுகிய காலத்துள் நடத்தி முடிக்கலாம்.

- i விளையாட்டு வீரர்கள். ஒழுங்கமைப்பாளர்கள், பார்வையாளர்கள் ஆகிய அனைவராலும் விர யமாக்கப்பட வேண்டிய நேரம், உழைப்பு, பணம் என்பவற்றின் அளவு குறைவானது.
- ii விளையாட்டுத்திடல் - உபகரணங்கள் பெற்றுக் கொள்ளல் விளையாட்டு வீரர்கட்கு வசதிகள் வழங்குதல். தேவையான அதிகாரிகளை அழைத் தல் போன்ற ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் இலகுவானது,
- iii எத்தரத்தைக் சேர்ந்த விளையாட்டு வீரராயி ருப்பினும் தனது கருமங்களுக்குப் பங்கம் விளையாதவாறு போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
- iv மிகத்தொலைவிலிருந்து வருகை தரும் குழுவி னருக்குக்கூட நிரற்போட்டியில் ஈடுபடுவது அதிக சிரமமாக அமையமாட்டாது.

2 யாதேனுமொரு போட்டியில் தோல்வியுற்றால் முழு நிரற் போட்டியிலிருந்தே விலக வேண்டியேற்படு கின்றமையால் குழுக்கள் மிக ஆர்வத்துடன் போட்டிகளில் ஈடுபடும் நிலை காணப்படும்.

3 நிரற்போட்டியின் போது, கடுமையான போட்டி ஏற்படுகின்றமையால், விளையாட்டு வீரர்களதும், ஆதரவாளர்களதும் ஆர்வம் அதிகரிக்கின்றது. பார்வையாளர்கட்குச் சிறந்த போட்டித்தொட ரொன்றைக் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. அத்தோடு, நிரற்போட்டியை நன்கு ஒழுங்கமைத்தலில் ஒழுங்கமைப்பாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

4 தெளிவான இறுதிப்போட்டி காணப்படல், விலக்கும் முறையின் விசேட தன்மைகளில் ஒன்ருகும்.

விலக்கும் முறையின் நன்மைகளை அறிந்துகொண்டோம் இனி அதன் தீமைகளைக் கவனிப்போம்.

### விலக்கும் முறையின் தீமைகள்

1 தோல்வியையும் குழு, நிரற் போட்டியிலிருந்து வெளியேற்றபடுவதால், தோல்வியடைந்த குழுக்களைச் சேர்ந்த வீரர்கட்குத் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கோ, திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கோ வாய்ப்பு கிடைக்கப் பெருமை அல்லது வாய்ப்புக் குறைவடைதல்

2 நிரற்போட்டியிலிருந்து வெளியேற்றப்படுகின்றமையால், வீரர்கள் உளத்தாக்கத்துக் குள்ளாக இடமேற்படல்.

3 முதலிடம் பெற்ற குழுவினுல் முதற் சுற்றுக்களில் தோற்கடிக்கப்பட்ட குழுக்கள், சில வேளைகளில் இறுதிப் போட்டியில் தோல்வியுற்று இரண்டாமிடத்தைப் பெறும் குழுவைவிட குறைவானவையாக காணப்படக் கூடும். எனவே போட்டியின் இரண்டாமிடம் திறமை அடிப்படையில் கிடைக்க வேண்டிய குழுவுக்குக் கிடைக்காமற் போக இடமுண்டு.

4 அவசர காரணங்களால், வீரரொருவருக்கு கலந்து கொள்ள இயலாமற் போன போட்டி யொன்றின் போது, அக்குழு தோல்வியடைந்து விடின் அவ் வீரருக்கு மீண்டும் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெறுவதில்லை.

இதுவரையில் விலக்கும் முறையின் நன்மை தீமைகள் பற்றிக் கலந்துரையாடினேம். இனி, லீக் முறையின் நன்மை தீமைகளை கவனிப்போம்.

### லீக் முறையின் நன்மைகள்

1 போட்டியிடும் குழுக்கள் ஒவ்வொன்றும், ஏனைய குழுக்கள் ஒவ்வொன்றும் போட்டியிடுவதால், திறமையான குழுவுக்கே முதலிடம் கிடைக்கின்றது

2 யாதேனும் விசேட காரணங்கள், ஆரம்ப நிலைப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கப்பெருத வீரருக்குக்கூட பின்னர் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடக்கூட வாய்ப்புக் கிடைத்தல்.

3 முன்னேற்றமடைந்துவரும் வீரர்களுக்கு அல்லது குழுக்களுக்கு வெற்றி, தோல்வி எது கிடைக்கப் பெறினும் தொடர்ந்தும் போட்டியில் ஈடுபடுவதன் மூலம் தமது அனுபவங்களையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும் குறைபாடுகளை நிவிர்த்தி செய்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தல்

4 பார்வையாளர்களைப் பொறுத்தமட்டில் நீண்ட காலத்துக்கு போட்டிகளைப் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றமை.

5 பார்வையாளர்க்கு, தாம் விரும்பும் போட்டிகளைத் தெரிவு செய்து அவற்றைக் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றமை.

### லீக் முறையின் தீமைகள்

1 இவ்வாறான நிரற் போட்டிகள், நீண்ட காலம் வரை நடைபெறுகின்றமையால், பணம், நேரம், உழைப்பு போன்றவை அதிக அளவில் விரயமாதல்

2 லீக் முறை மிக நீண்டதொரு கருமத் தொடராகையால் விளையாட்டுத் திடல்களைப் பெற்றுக் கொள்ளல், நடுவர்களைப் பெற்றுக் கொள்ளல், ஏனைய வழிகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற சகல அம்சங்களிலும், விலக்கும் முறையை விட அதிக வசதியீனங்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படல். இவ்வாறான நிரற் போட்டிகள் நீண்ட காலம் வரை நடைபெறுகின்றமையால் சில வேளைகளில் பார்வையாளரின் ஆர்வம் குறைவடைந்து விடக் கூடும்.

4 விலக்கும் முறையில் இறுதிப்போட்டி, அரையிறுதிப் போட்டிகள் காலிறுதிப் போட்டிகள் போன்ற போட்டிகளைத் தெரிவு செய்து பார்வையிடுவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் லீக் போட்டிகளின் போது அவ்வாறான வாய்ப்பு கிடைக்கப் பெறுவதில்லை.

**இதுவரையில் நீங்கள்**

- நிரற்போட்டியின் அவசியம்,
- நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைக்கும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
- அம்முறைகளின் நன்மை தீமைகள்

என்பன தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்.

அடுத்ததாக நாம் நிரற்போட்டி ஒழுங்கமைப்பின் போது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான சில விடயங்கள் பற்றிக் கவனிப்போம்.

- போட்டியின் தன்மை (கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்றவை.)
- ஒரு போட்டிக்குச் செலவாகும் நேரம், நிரற் போட்டியை நிறைவு செய்வதற்குச் செலவாகும் நேரம்.
- கிடைக்கப்பெறும் வசதிகளும், உபகரணங்களும்.
- போட்டியில் பங்குபற்றுவோரின் பால் (ஆண் /பெண்) தரம் (கனிட்ட / சிரேட்ட / திறந்த) என்பன.

நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைப்புச் செய்யும் போது, இவ்விடயங்களைத் கருத்திற் கொண்டு பொருத் தமான முறையைத் தெரிவு செய்வது உங்கள் பொறுப்பாகும்.

இனி பின்வரும் பொழிப்பை வாசியுங்கள்.

லீக் முறைப் போட்டிகளில் ஈடுபடும் சகல குழுக் களும் ஏனைய சகல குழுக்களுடனும் போட்டியிடு தல் வேண்டும் புள்ளி வழங்கும் குறிப்பிட்ட முறை யை அடிப்படையாகக் கொண்டு, வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். விலக்கும் முறை, லீக் ஆகிய இரு முறைகளிலும் நன்மை தீமைகள் உள்ளன. அவை விளையாட்டு வீரர்கள், விளையாட்டுக் குழுக் கள், ஒழுங்கமைப்பாளர்கள், பார்வையாளர்கள் ஆகிய அனைவர் மீதும் பங்களிப்புச் செய்கின்றன.

லீக் முறை ஒழுங்கமைப்பு தொடர்பாக இதுவரை பெற்ற விளக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக பின் வரும் செவ்வை பார்த்தலைப் பூர்த்தி செய்க.

**செவ்வை பார்த்தல் 3**

1 லீக் முறையில் நிரற்போட்டியொன்றில் கலந்து கொள்ளும் பின்வரும் குழுக்களுக்காக நடத்தப் படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கையை அவ்வொவ்வொரு கூட்டினுள் எழுதுக.

| குழு இல | போட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 6 | ........ |
| 5 | ........ |
| 10 | ........ |
| 9 | ........ |

2. விலக்கும் முறையின் சில நன்மைகளும் லீக் முறை யின் சில தீமைகளும் கீழே தரப்பட்டுள்ளன. அவை

எவ்வெவ் முறைக்கு உரியன என்பதைத் தெரிவு செய்து உரிய கூட்டினுள் 'வி' அல்லது 'லீ' என எழுதிக் காட்டுக.

i போட்டிகளின் எண்ணிக்கை குறைவானதாகையால், வீரர்களின் நேரம், உழைப்பு, என்பன மீதப்படுத்தப்படுவதோடு, பொருளாதார ரீதியிலும் நன்மை கிடைக்கின்றது. ☐

ii புதுக்குழுக்களுக்குத் தமது திறமைகளை விருத்தி செய்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது. ☐

iii குறிப்பிட்ட இறுதிப் போட்டியைக் கண்டுகளிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ☐

iv நீண்ட கால போட்டித் தொடரொன்றினைக் கண்டுகளிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ☐

v வீரர்கட்குத் தமது குறைபாடுகளை நிவிர்த்தி செய்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது ☐

vi ஒழுங்கமைப்பு இலகுவானது. ☐

சரியான விடைகள் இறுதியில் தரப்படடுள்ளன உங்கள் விடைகளை ஒப்பிட்டுப் பார்க்க.

இம்மொடியூலின் மூலம் நீங்கள் விளங்கிக் கொண்ட விடயங்களை மீண்டும் நினைவூட்டிக் கொவதற்காக, பின்வரும் பொழிப்பை வாசியுங்கள்,

## 6.0 பொழிப்பு

விளையாட்டினதும் விளையாட்டு வீரர்களதும் முன்னேற்றத்தை அளப்பதற்காக நிரற் போட்டிகள் அவசியமாகின்றன. நிரற் போட்டியொன்றினை பிரதானமாக' இரு முறைகளில் ஒழுங்கமைப்புச் செய்யலாம்.

i தோல்வியடைந்த குழுவினரை (விலக்கும்) முறை,

li லீக் முறை.

**தோல்வியடைந்தோரை விலக்கும் முறைப்படி**

i தோல்வியடைந்தோர், நிரற்போட்டியிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

ii வெற்றி பெற்றோர், தொடர்ந்தும் போட்டியிட்டபடி முன்னேறிச் செல்வர். இதுவரை போட்டியிட்டு வெற்றி பெறும் குழுவுக்கு முதன்மை (Championship) கிடைக்கப்பெறும். இறுதிப் போட்டியில் தோல்வியடைவோருக்கு இரண்டாமிடமும் கிடைக்கப்பெறும்.

லீக் முறைக்கு ஏற்ப.

i ஒவ்வொரு குழுவும், ஏனைய ஒவ்வொரு குழுவிடனும் போட்டியிடுதல் வேண்டும்.

ii பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் முதன்மையும் இரண்டாமிடமும் வழங்கப்படும் (வெற்றியாளர் புள்ளி அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.)

விலக்கும் முறையானது, இலகுவாக ஒழுங்கமைக்கக் கூடிய, குறுகிய கால நிரற்போட்டி முறையாகும். விளையாட்டு வீரர்களைப் பொறுத்தமட்டில், விரயமாகும் உழைப்பு, நேரம், பணம், என்பன குறைபாலானது. இது பெருந்தொகையான குழுக்கள் பங்கு பற்றும் நிரற்போட்டிகட்கு மிக ஏற்றதாகும். லீக் முறையானது நீண்டகால நிரற் போட்டி முறையாகும். விளையாட்டு வீரர்கள் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும், திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும் இம்முறையின் போது அதிக வாய்ப்புக் கிடைக்கின்றது. எனினும் இம்முறையில் நிரற்போட்டிகளை ஒழுங்கமைப்பது கடினமானதாகும்.

இம்மொடியூலைக் கற்றதன் பின்னர், நீங்கள் பெற்றுள்ள அறிவை ஆய்வு செய்வதற்காக பின்வரும் பரிசோதனை வினாக்கட்கு விடையளிக்க.

## 7.0 பிற்சோதனை

*1* பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் எதிரே உள்ள கூட்டினுள் குறிக்க.

i நிரற்போட்டியொன்றினை ஒழுகமைப்புச் செய்யும் போது, பெற்றுக் கொள்ளக் கூடிய வளங்களின் அளவு தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெற்றிருப்பது அவசியமான தாகும். ☐

ii நிரற்போட்டியொன்றினை வெற்றிகரமானதாக்கி கொள்ள வேண்டுமெனில் ஒழுங்கமைப்புநடவடிக்கைகளுக்குஉதவி புரியும் குழுக்களுக்கு விசேட சலுகை வழங்கப்படல் வேண்டும். ☐

iii விலக்கும் முறைப்போட்டி அட்டவணையொன்றில் ☐

i அடைப்புக்குறிகளின் எண்ணிக்கையும் போட்டியின் எண்ணிக்கையும் சமனானதாகும், ☐

ii இரண்டாவது சுற்றுத் தகைமை பெறும் குழுக்களின் எண்ணிக்கை எப்போது, 2 இன் மடங்குகளு ளொன்ருக இருக்கும். ☐

iv லீக் முறை நிரற்போட்டி குறுகிய காலத் துள் நடத்தப்படுவதால். ☐

v லீக்முறையில சம முடிவு நிலையைத் தீர்ப் பதற்ககக மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகளை நிரற்போட்டிச் சட்ட திட்டங்களில் புகுத்துவது அவசியாமா னது. ☐

2 வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து 30 குழுக் கள் பங்குபற்றும் கரப்பந்தாட்ட நிரற் போட்டியொன்றினை நடாத்துவதற்குப் பொருத்தமான முறை (லீக் முறையாகும்/ விலக்கல் முறையாகும்.)

3 விலக்கல் முறை நிரற்போட்டியொன்றில் 12 குழுக்கள் பங்குபற்றுவதாக இருப்பின் வழங்க வேண்டிய 'இடை'களின் எண் ணிக்கை, (5/6/4/2) ஆகும்.

4 லீக் முறைப்படி 10 குழுக்கள் போட்டியி டும் நிரற்போட்டியென்றினை நிறைவு செய் வதற்காக, நடத்தப்பட வேண்டிய போட் டிகளின் எண்ணிக்கை (45/20/90/60) ஆகும்.

5 ஐந்து குழுக்கள் பங்குபற்றுகின்ற லீக்முறை நிரற் போட்டியொன்றின், பூரணமற்ற போட்டி அட்ட வணையொன்று கீழே தரப்பட்டுள்ளது. இடை வெளிகளை நிரப்புக.

| சுற்று 1 | சுற்று 2 | சுற்று 3 | சுற்று 4 | சுற்று 5 |
|---|---|---|---|---|
| இடை – 1 | இடை – 5 | இடை ☐ | இடை – 3 | இடை - 2 |
| 5 — 2 | ☐ — 1 | ☐ — 5 | 2 — 4 | 1 — ☐ |
| 4 — 3 | 1 — 2 | 2 — 1 | ☐ ☐ | ☐ ☐ |

6 தெரிவு செய்யும் முறைப்படி போட்டி அட்டவணை யொன்றினைத் தயார்ப்படுத்துவதற்காக குழுக்களை காற்பகுதிகளாக வகுத்தல் தொடர்பான அட்ட வணையொன்று கீழே தரப்பட்டுள்ளது. அதில் விடப் பட்டுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கை. | 1 வது காற் பகுதி | 2 வது காற் பகுதி | 3 வது காற் பகுதி | 4 வது காற் பகுதி |
|---|---|---|---|---|
| 26 | | | | 6 |

7 சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

நிரற்போட்டியொன்றினை ஒழுங்கமைக்கும் போது அதிகாரிகளை அழைக்கையில் நாம் அதிக கவனஞ் செலுத்த வேண்டிய அம்சம் யாது

i அறிமுகமுடையோரை, அழைத்தல்.

ii திறமைமிக்க விளையாட்டு வீரர்களை அழைத்தல்.

iii அவ்விளையாட்டின் சட்டதிட்டங்களை அறிந்து வைத்துள்ளோரை அழைத்தல்.

iv கட்டுடலுள்ளோரை அழைத்தல்.

8 நிரற்போட்டிகளை ஒழுங்கமைக்கையில் ஒழுங்கமைப்பாளர்கள்.

i சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ii கல்வியறிவுடையோராக இருத்தல் வேண்டும்.

iii திறமையான விளையாட்டு வீரர்களாக இருத்தல் வேண்டும்.

iv விளையாட்டில் ஆர்வமுள்ள நடுநிலைமை வகிக்கக்கூடிய தன்மையுடையோராக இருத்தல் வேண்டும்.

சரியான விடைகள் ஈற்றில் தரப்பட்டுள்ளன. உங்கள் விடைகளை அவற்றுடன் ஒப்பிட்டு தவறுகள் இருப்பின் திருத்திக்கொள்க.

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.

## 8.0 ஒப்படை

01. வலைப் பந்தாட்ட போட்டியொன்றின்போது 13 குழுக்கள் பங்கு பற்றின. தோற்றோரைத் தவிர்க்கும்" முறையில் இப் போட்டியை நீர் எவ்வாறு ஒழுங்கு செய்வீர் என விளக்குக. போட்டியின்போது வாசியினை பெற்றுக் கொடுக்கும் முறையினையும், போட்டி வரைபையும் காட்டுக.

02. போட்டிகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக கீழ்வரும் சந்தர்ப்பங்களை முறையாக ஒழுங்கு செய்தல் வேண்டும்.

1. போட்டி முன் ஒழுங்கமைப்பு
2. போட்டி நாள் ஒழுங்கமைப்பு
3. போட்டியின் பின் ஒழுங்கமைப்பு

மேற்படி நிலைகளியிட்டு சிறு விளக்கமொன்றை தருக.

03. போட்டிகளை ஒழுங்கு செய்வதன் நன்மை தீமைகளை விளக்குக.

## 9.0 விடைகள்

### முற்சோதனை

i கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெற், உதைப்பந்தாட்டம்.

ii இல்லை.

iii வெற்றுக் கேடயம்

iv சட்ட வேலிப்பாய்ச்சல்.

v உண்டு.

vi 4

vii கரப்பந்தாட்டம் - 06
எல்லே - 16
கிரிக்கெற் - 11
வலைப்பந்தாட்டம் - 07
உதைப்பந்தாட்டம் - 11


viii 1 வலைப்பந்தாட்டம்
2 கரப்பந்தாட்டம்.
3 எல்லே

ix ii

## செவ்வைபார்த்ல் 1

*1* vi
*2* i
*3* v
*4* ii
*5* iv
*6* vii

## செயற்பாடு 1




இடைகளின் எண்ணிக்கை *16 – 11 = 5* இடைகள்
நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை
$= n - 1 = 11 - 1 = 10$, போட்டிகள்

## செவ்வை பார்த்தல் 2

*1* ii
*2* iii
*3* iii
*4* ii
*5* iii
*6* iv

*2* i வி
ii லீ
iii வி
iv லீ
v லீ
vi வி

செவ்வை பார்த்தல் 3

பப்ஙுகு

| போட்டியிடும் குழுக்களின் எண்ணிக்கை | போட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 6 | 15 |
| 5 | 10 |
| 10 | 45 |
| 8 | 28 |
| 9 | 36 |

பின் ஆய்வு

1 i
ii
iii i ii
iv
v

2 விலக்கும் முறை.

3 நான்கு

4 45 ஆகும்.

5

| சுற்று i | சுற்று ii | சுற்று iii | சுற்று iv | சுற்று v |
|---|---|---|---|---|
| இடை – 1 | இடை - 5 | இடை – 4 | இடை – 3 | இடை - 2 |
| 5 – 2 | 4 – 1 | 3 – 5 | 2 - 4 | 1 – 3 |
| 4 - 3 | 3 – 2 | 2 – 1 | 1 - 5 | 5 – 4 |

6

| குழுக்களின் எண்ணிக்கை | பகுதி i | பகுதி ii | பகுதி iii | பகுதி iv |
|---|---|---|---|---|
| 26 | 7 | 6 | 7 | 6 |

7 iii

8 iv

## குறிப்பு

குறிப்பு

குறிப்பு:

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTI